Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

பாடசாலை மாணவர்களுக்கான DSI சப்பாத்துக்கள் (SHOES) ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்

DSI பாதணிகளின்

யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்

SUPER SHOES

சுப்ப சூஸ்

இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-414)

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்க.:தா 04 (08.01.2003) புதன்கிழமை இதழ் : 99

## மன்னிப்புச் சபை, ஐ. நா. அதிகாரிகளை அரசு – புலிகள் இணைந்து சந்திப்பர்!

தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாவது நாள் பேச்சுக்களில் மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், இது சம்பந்தமாக- சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ.நா. போன்றவற்றில் உயரதிகாரிகளுடன் அரசும் புலிகளும் இணைந்து பேசுவதென முடிவு செய்யப்பட்டது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் இயன் மார்ட்டின் எதிர்வரும் பெப்ரவரி மாதம் அரசு மற்றும் விடுதலைப் புலிகளின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வீடுவீடாக விபரம் திரட்டும் படையினரால் மக்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் சில பகுதிகளில் படையினர் வீடு வீடாகச் சென்று குடும்ப விபரங்களைத் திரட்டி வருகின்றனர்.

காங்கேசன்துறை வீதியிலும், நல்லூர்ப் பகுதியிலும் கடந்த சில நாட்களாக மேற்படி விபரம் சேகரிக்கும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். இது இப்பகுதி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (க)

## உயர் பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு இந்தச் சுற்றுப் பேச்சில் இறுதி முடிவு

(நகொன்பத்தம்)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு அப்பால் உள்ள பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சுமார் 75 வீதமான மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இவ்வாறு உயர் பாதுகாப்பு வல

(10ஆம் பக்கம் பார்க்க)

### புங்குடுதீவில் அரசியல்துறை அலுவலகம்

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைச் செயலகம் புங்குடுதீவில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.


இவ்விழாவில்- தேசியக்கொடியை நெடுந்தீவு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றி வைத்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



குழப்பம் தந்த குழுவும் கலைஞ்சுது, இனியாவது குழப்படிக்காரர் சும்மா இருப்பினமோ...



விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், பேச்சுக்கள் முடிந்த மாலையில் ஹோட்டேலின் ஏரியோரமாக அமர்ந்திருந்து கலந்தாய்வு செய்கின்றனர். ஏரிக்கப்பால் இருப்பதுதான் பேச்சுவார்த்தை மண்டபமாகும்.

# பாதுகாப்பு உபகுழு இனி இயங்காது!

## புனர்வாழ்வுக் குழுவிடம் மீள்குடியமர்வு; பணியைத் துரிதமாக்கவும் இணக்கம்!

**(நகொன்பத்தமிலிருந்து கனகரவி)**

**இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்குத் தடையாகவிருக்கும் உயர் பாதுகாப்பு வலயங்களைத் தளர்த்துவது தொடர்பாக முடிவெதனையும் காணமுடியாத நிலையில் - பாதுகாப்பு உபகுழு இனிமேலும் இயங்குவதில் அர்த்தமில்லை என்பதால் அது கலைக்கப்படுவதாகவும், மீள்குடியமர்வுப் பணிகள் யாவும் இனிமேல் புனர்வாழ்வு உபகுழு மூலமே கையாளப்படுவதோடு இப்பணிகளைத் துரிதமாக்கவும் இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அறிவித்தார்.**





நேற்றைய பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோது கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்ததாவது-

உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவம் விலகி, எமது மக்களை அங்கு மீளக்குடியேற்றம் செய்யும் விடயத்துக்கும் - விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களையும் விடயத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதையும் -

இப்படியான நிபந்தனைகளை விதிப்பது தவறானது என்பதையும் அரசாங்கத் தரப்பு உணர்ந்து கொண்டது.

ஆயுதங்கள் எமது மக்களின் பாதுகாப்புக்குத் தேவையானவை. இதற்குச் சொந்தமானவர்கள் எமது மக்கள். மக்களிடமிருந்தே நாம் ஆயுதங்களைப் பெறுகின்றோம்.

நாம் இந்த ஆயுதங்களுக்கு உரிமையானவர்களல்ல, நாம் இதன்

(10ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய பேச்சுக்களில் சொல்ஹெய்ம் கூறுவதை செவிமடுக்கும் புலிகள் பிரதிநிதிகள்.



பேச்சு மண்டபத்துக்கு வெளியே பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள தாய்லாந்துப் பொலிஸார் ரோந்து வருகின்றனர். *(படங்கள்: அலெக்ஸ்)*

## காணாமற்போனோர் விவகாரம்; உண்மை நிலையை வெளியிடவும்!

### தாய்லாந்தில் புலிகள் அரச தரப்பிடம் வலியுறுத்து

படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பாகவும் தாய்லாந்தில் நடைபெற்ற நேற்றைய பேச்சுக்களின்போது விரிவாக ஆராயப்பட்டது.

காணாமற்போனவர்கள் விவகாரம் தொடர்பாக அரசு உடனடியாக செயற்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இவர்கள் தொடர்பாக உண்மைநிலையை அரசு காலதாமதமின்றி வெளியிட வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் தரப்பு வலியுறுத்தியது.

இவ்விவகாரம் குறித்து உடனடியாக அரசாங்கம் விசாரணைக் குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

## ஈராக்குக்கு எதிரான போரில் இறங்குவதற்கு

# அமெரிக்கத் துருப்புக்களுக்கு உதவ பிரான்ஸ், பிரிட்டன் படைகள் தயார்!

ஈராக்கிற்கு எதிரான யுத்தத்திற்கு உதவ அமெரிக்காவின் நேச நாடுகள் தமது துருப்புக்களை, வளைகுடாவிற்கு அனுப்பத் தயாராகி வருகின்றன.



அடுத்த வாரம் பிரித்தானியா தனது படைகளை அனுப்புவது தொடர்பான அறிவிப்பை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈராக்கில் நடைபெறவுள்ள யுத்தத்திற்கு பிரெஞ்சுப்படைகளின் உதவி தேவைப்படுமாயின் அதற்கான ஆயத்தங்களைத் தமது நாடு மேற்கொண்டு வருவதாக, பிரெஞ்சு ஜனாதிபதி சிராக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முழுமையான படையணிகள் தாக்குதலுக்குத் தயாராக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வேளையில், ஐ.நாவின் ஆயுதப் பரிசோதகர்கள் தொடர்ந்தும் ஈராக்கிடம் அழிவுதரும் ஆயுதங்கள் இருக்கின்றனவா என்பதைப் பரிசோதித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புஷ்ஷின் பொருளாதார திட்டத்துக்குக் கண்டனம்

அமெரிக்காவின் சரிந்து வரும் பொருளாதாரத்தை, மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி புஷ் முன்வைத்துள்ள பொருளாதாரத்திட்டத்தை, எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி பொறுப்பற்ற நடவடிக்கை எனக் கண்டனம் செய்துள்ளது.



புஷ்ஷிற்குத் தலைவலியாகும் நான்சி

ஜனாதிபதி புஷ், 600 பில்லியன் டொலர் செலவு கொண்ட பொருளாதாரத்திட்டத்தை முன்வைத்துள்ளதை விட, தாம் வைத்திருக்கும் திட்டத்தின் மூலம் அதிகளவானதும் விரைவானதுமான விளைவுகளைப் பெறலாம் எனக் குடியரசுக்கட்சியின் தலைவி நான்சி பெப்லோசி தெரிவித்துள்ளார்.

தற்பொழுது அமெரிக்காவில் புதிய முதலீடுகள் பாரியளவில் குறைவடைந்து வருவதால், வேலையில்லாத் திண்டாட்டம் சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது.


இதனை நிவர்த்திக்க பெரும் வரி விதிப்புக்களை அமெரிக்க அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யுத்தத்திற்குத் தயாராகின்றன ஈராக்கின் படையணிகள்!









78 ஆவது அகவையில் கால் பதித்துள்ள
சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டிக்கு
எமது வாழ்த்துக்கள்.
சாந்தி அச்சகம்,
யாழ்ப்பாணம்.
(நாச்சிமார் கோவிலடி)
(சி-418) T.P. - 021 - 2821 - உள்ளூர், 0094-212821 - வெளியூர்.

வாழ்த்துக்கள்
78 ஆவது அகவை கண்டுள்ள
கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களுக்கு சகல ஆசிகளும் கிடைக்க
இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
ஆனந்தி,
துர்க்காபுரம்.
(சி-413)

சைவத்திற்கும் தமிழிற்கும் அரும்பணிகள் ஆற்றி
78 ஆவது அகவை கண்டுள்ள
சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டிக்கு
எமது வாழ்த்துக்கள்
அலெக்ஸ் வீடியோ அன் பிக்சர் பலஸ்
துர்க்காபுரம்.
(சி-417)

## இன்றைய நாள் இனிய நாள்

**08-01-2003 - புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| மேடம் | :- | ஆரோக்கியம், பூமி லாபம், எதிர்ப்பாலாரால் நன்மை. |
| இடபம் | :- | கோப மிகுதி, விஷநீர், மனப்பயம், தேகபலக் குறைவு. |
| மிதுனம் | :- | நன்மதிப்பு, மனமகிழ்ச்சி, உயர்வு, சினேகிதரால் லாபம். |
| கர்க்கடகம் | :- | உறவினருக்குத் தேக சுகம் பாதிக்கப்படும், தொழில் முடை, கோபப்படுதல். |
| சிங்கம் | :- | இனசனத்தால் வெறுக்கப்படுதல், ஏமாற்றப்படுதல், ஒழுக்கக்கேடு. |
| கன்னி | :- | இடையூறு, பிரயாண லாபம், பெண்களால் சுகம், அதிக லாபம். |
| துலாம் | :- | சோர்வு, காரிய அனுகூலம், கெட்ட செயல், இனசன கொண்டாட்டம். |
| விருச்சிகம் | :- | நல்ல வழியில் செலவு, உறவினரால் கவலை, பெரியோர் மதிப்பு. |
| தனு | :- | குடும்பத்தினருடன் தகராறு, நிம்மதி அற்றநிலை, தேகசுகக்குறைவு. |
| மகரம் | :- | பிறருக்கு உதவுதல், பெரியோர் மதிப்பு, பெண்களால் நன்மை. |
| கும்பம் | :- | பொருட்சேதம், பிரிவு, புத்திரரால் கவலை. |
| மீனம் | :- | தொழில் சிறப்பு, காரிய சித்தி, குடும்ப மகிழ்ச்சி. |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

## சிறுவிளம்பரம்

### தேவை

மீன்பிடிக்கும் வலைக்கு சாயம் போடும் கண்டல்பட்டை (காய்ந்தது) நல்ல விலைக்கு வாங்கப்படும்.

க.செ.கைலாசபிள்ளை அன் சன்ஸ், 76, பெரியகடை (மருந்துக்கடை), யாழ்ப்பாணம். (சி-411)

### மூக்குக் கண்ணாடி

1962ஆம் ஆண்டு தொடக்கம் வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கிய மொறாயஸ் மூக்குக் கண்ணாடி அகம் தற்பொழுது பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன்பாக இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம், யாழ்ப்பாணம். (சி-439)

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சூர்யா, லைலா, சினேகா நடித்த
உன்னை நினைத்து
10.01.2003 முதல் வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 மட்டும் SPIDER MAN
(சி/397)

ராஜா
யாழ்ப்பாணம்.



முரளி, ராதிகா சௌத்திரி,
வடிவேல், மணிவண்ணன் நடித்த
சுந்தரா டிராவல்ஸ்
10.30,
2.30,
6.00
(சி-398)

# POSTS VACANT

A reputed Engineering Firm with over 80 years of existence in Srilanka with a view to expand it's Services of the Jaffna Branch invites applications from Suitably qualified and experienced Candidates for the following Posts.

- ✦ Electrical & Electronic Engineer
- ✦ Civil Engineer
- ✦ Clerk
- ✦ Salesman (Experienced in Hardware Sales)

Applicants are requested to call over in Person along with CV originals of Certificates at the address given below on 13th January 2003 at 10.00 a.m.

**Samuel Sons & Co Ltd**
412, 414, Hospital Road
(Adjoining Hatton National Bank)
Jaffna.
(சி-451)

# கல்விச்சமூகம் பணிநேரத்தை அதிகரித்து கல்வி அபிவிருத்திக்கு உதவ வேண்டும்!

## தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் அழைப்பு

(திருகோணமலை)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில், கல்வி நிலையை அபிவிருத்தி செய்யப் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவிருப்பதாக - தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.



ஆய்வரங்கில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.

திருகோணமலையில் - நேற்று முன்தினம் ஆரம்பமான- அனைத்து மாவட்ட, வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்துகொண்ட, மூன்று நாள் ஆய்வுப்பட்டறையில் அவர் சிறப்புரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது -

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டதாலும், ஆசிரியர்கள் பற்றாக்குறையாலும் பெரும் பாதிப்படைந்த கல்வி நிலையை-மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய அவசியத் தேவையுள்ளது.

வடக்கு - கிழக்கில் பணியாற்றும் ஆசிரியர்கள், அதிகாரிகள்- புதிய நியமனங்கள், புதிய ஆட்சேர்ப்பு நடைபெறும் வரையில் - தமது வேலை நேரத்திலும் அதிக நேரத்தைப் பணிகளில் ஒதுக்கி கல்வி நிலையை அபிவிருத்தி செய்யவேண்டும்.

இன, மத வேறுபாடுகளைக் களைந்து வடக்கு - கிழக்கின் கல்வியை அபிவிருத்தி செய்ய அனைவரும் பாடுபடவேண்டும். வடக்கு-கிழக்கில் வாழும் சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டே யாகவேண்டும். நாம், தடைகளைக் கடந்து - அவற்றை முன்னேற்றப்



படிக்கட்டுக்களாக்கி - எமது சிறாரின் கல்வி அபிவிருத்திக்கான இலக்குகளை அடையலாம் என்றார் இளங்குமரன். இன்றுடன் முடிவடையும் இந்த ஆய்வுப்பட்டறையைத் தொடர்ந்து, வரும் 11 ஆம் திகதி கிளிநொச்சியில் இரண்டாம் கட்டமாக அடுத்த மூன்றுநாள் ஆய்வரங்கு ஆரம்பமாகவுள்ளது.

## விருதுக்குத் தகுதியானவர் விஞ்ஞான சங்கம் பெயர்களைக் கோருகிறது

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால் நடாத்தப்படும் 11வது ஆண்டு நிகழ்வுகள் ஏப்ரல் மாதம் 2ம், 3ம் திகதிகளில் யாழ்ப்பாணப்பல்கலைக் கழக நூலகக்கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்கம் இந்நிகழ்வில் வழங்கப்படுவதற்காகத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரிசானது தேசிய ரீதியில் இலங்கையின் முன்னேற்றத்திற்குப் பங்களித்த வகையில், ஏதாவது விஞ்ஞானத் துறை சார்ந்த குறிப்பிடத்தக்கதான ஆய்வுப்பணிக்காக வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும் பேராசிரியர் நா.ஞானகுமாரன், உதவிப் பொதுச்செயலாளர், யாழ். விஞ்ஞான சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். இம்மாத இறுதிக்குள் இது தொடர்பாக விண்ணப்பிக்க வேண்டும் என யாழ்ப்பாண விஞ்ஞானசங்கம் கேட்டுள்ளது.

## புலிகளின் அலுவலகம் திறக்கப்படவுள்ளது

விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகம் ஊர்காவற்துறை - சுருவில் வீதியில் திறக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி காலை 10 மணிக்கு இவ்வலுவலகம் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(51)

## புஷ்பவனம் குப்புசாமியின் இசை நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில்

### 10ஆம் திகதி யாழ். இந்துவில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

பிரபல தென்னிந்திய பாடகரான புஷ்பவனம் குப்புசாமி குழுவினரின் இசை நிகழ்ச்சி எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சின் ஏற்பாட்டிலேயே இந்த இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணத்தில் 'சதொச' வின் புதிய நவீன சந்தை ஒன்று திறந்து வைக்கபடுவதையொட்டியே இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

### யாழ்ப்பாணக் குடாநாட்டில்

## காணாமற்போனோரின் பாதுகாவலர் பிரதமரின் செயலருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோரின் பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதிகள் - பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் மற்றும் அதிகாரிகளை இன்று சந்தித்துப் பேசவுள்ளனர்.

1996/97ம் ஆண்டு காலப்பகுதியில் வடபகுதியில் காணாமல் போன தமது உறவுகள் பற்றித் தகவல்களைப் பெற்றுத் தருமாறு இச்சந்திப்பின்போது கோரவிருப்பதாகச் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இச்சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு அச்சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினருடன் யாழ். அரச அதிபரும் கொழும்பு சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ச,கி)





தெல்லிப்பளைப் பிரதேச செயலர் அலுவலகம் முன்னால் உண்ணாவிரதமிருந்து வரும் வலி.வடக்கு மக்களை படத்தில் காணலாம்.

## யாழ்ப்பாண மக்கள் மிகத் தீவிரமான வாழ்க்கைப் பிரச்சினைக்குள் சிக்கியுள்ளனர்

### ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் கவாகுச்சி

(கொழும்பு)

யாழ்ப்பாண மக்கள் மிகத்தீவிரமான வாழ்க்கைப்பிரச்சினைகளுக்குள் சிக்கியிருப்பதோடு மட்டுமல்லாது - கண்ணிவெடிகள் அபாயத்திலிருந்தும் அவர்கள் மீளவில்லையென ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் யொரிக்கோ கவாகுச்சி தெரிவித்தார். தனது யாழ். விஜயத்தை முடித்துக்கொண்டு - கொழும்பு திரும்பிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 16 வருட காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த வெளிநாடொன்றின் முதலாவது வெளிவிவகார அமைச்சர் கவாக்குச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

இவர், வட-கிழக்குப் பகுதி மக்களின் மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, ஜப்பானிய அரசாங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 1.25 மில்லியன் டொலர் பெறுமதியான நிதியுதவியை, நான்கு அரசசார்பற்ற அமைப்புக்களுக்கு வழங்கும் உத்தியோகபூர்வ நிகழ்விலும் கலந்து கொண்டிருந்தார்.

## வட - கிழக்குப் புனரமைப்பு நடவடிக்கை உலக வங்கியின் வழி நடத்தலின் கீழ்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே வட-கிழக்கின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

புதிய ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட இருக்கும் அனைத்து அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும்போது, உலக வங்கியின் சில ஆலோசனைகளும் பிரமாணங்களும் பின்பற்றப்படவுள்ளது.

இதன் முன்னோடியாக பொதுவான ஆலோசனைகள் சிலவற்றை ஏற்கனவே உலக வங்கி, வட-கிழக்குப் பகுதியின் அரச நிர்வாகத்துக்கு வழங்கியுள்ளது.

முன்னதாக, வட - கிழக்குப் பகுதிகளுக்கான சர்வதேச உதவிகளை வழிநடத்தும் பொறுப்பு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இதேவேளை - நிதிப் பயன்பாடு பற்றிய பணிகளை மேற்பார்வை செய்வதற்கும் சர்வதேச நிறுவனமொன்றே அழைக்கப்படலாம் என தகவலறிந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

(க)

## கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்று முதல் தொடர் ஆர்ப்பாட்டம்

### 'நாட்டைப் பாதுகாக்கும் அமைப்பு' நடத்துகிறது

(கொழும்பு)

அரசுக்கெதிரான தொடர்ச்சியான ஆர்ப்பாட்ட இயக்கம் ஒன்றை 'நாட்டைப் பாதுகாக்கும் அமைப்பு' நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக பௌத்த பிக்குகளின் மேற்படி அமைப்பு, அரசுக்கெதிரான பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஆரம்பித்தது. இவ் ஆர்ப்பாட்ட இயக்கம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவிருக்கிறது.

சமஷ்டி என்ற போர்வையில் அரசு நாட்டின் இறைமையைப் பாதிக்கும் வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருதாகவும்,

புலிகளுக்கு வானொலி உபகரணங்களை பெற்றுக்கொடுத் தமை மற்றும் அரசு மேற்கொண்டு வரும் ஏனைய இறைமையைப் பாதிக்கும் வகையிலான நடவடிக்கைகளைக் கண்டித்துமே மேற்படி தொடர் போராட்டம் நடத்தப்படுவதாக சம்பந்தப்பட்ட அமைப்பு அறிவித்துள்ளது..

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வை.அர்ஜன் ஞாபகார்த்தமாக லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மாபெரும் மென்பந்துக் கிரிகெட் சுற்றுப்போட்டி ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

பொன்னையா லேன் ,ஆனைக்கோட்டையில் நடைபெறவுள்ள இந்த சுற்றுப்போட்டிக்கு விளையாட்டுக் கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 11 ஆம் திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சமையலின்போது தீக்காயமடைந்த இளம் பெண் மரணம்

சமையலின்போது, உடையில் தீ பற்றிக்கொண்டமையால் ஏற்பட்ட தக்காயத்துடன் கடந்த மாதம் 26ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் பெண் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று மரணமானார்.

நாவாந்துறையைச் சேர்ந்த வி.சுதர்சினி என்ற இளம் குடும்பப்பெண்ணே இவ்வாறு சிகிச்சை பயனளிக்காமையால் மரணமானவராவார். (கி,ரா)

# தனியான முஸ்லிம் பிரதிநிதித்துவம்; இன்னமும் அதற்கு நேரம் வரவில்லை!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தாய்லாந்தில் தெரிவிப்பு

(நகொன்பத்தம்)


தாய்லாந்தின் நகொன்பத்தம் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெறும் சமாதானப் பேச்சுக்களில் அமைசசர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத் தரப்புப் பிரதிநிதியாகவே கலந்து கொண்டிருக்கின்றார்.

முஸ்லிம்களின் பிரதிநிதியாக அமைச்சர் ஹக்கீம் கலந்துகொள்வார் என முன்னர் கூறப்பட்டிருந்தபோதும், முஸ்லிம் காங்கிரசிற்குள் ஏற்பட்ட நெருக்கடியால் - அரசாங்கம் இது தொடர்பான இறுதி முடிவினை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதனாலேயே அமைச்சர் ஹக்கீம் இம்முறையும் அரச தரப்புப் பிரதிநிதியாகவே கலந்துகொள்கின்றார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் - அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களின் அடுத்தடுத்த கட்டங்களிலேயே, முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இடம் ஒதுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

கிழக்கு முஸ்லிம்கள் குறித்து பேசப்படும்போது கிழக்கு முஸ்லிம் பிரதிநிதிகளும், கிழக்குச் சிங்கள மக்கள் குறித்து பேசப்படும்போது கிழக்குச் சிங்களப் பிரதிநிதிகளும் பேச்சுக்களில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.



நான்காம் கட்டச் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டிருக் கும் அரசாங்கக் குழுவுடன் ஹக்கீம் அமர்ந்திருப்பதையும், பின்வரிசையில் பார்வையாளர்களாக முஸ்லிம் பிரதிநிதிகள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

ஆனால், இதற்கான நேரம் இன்னமும் வரவில்லை. தகுந்த நேரம் வரும்போது இவர்களைப் பேச்சுக்களில் சேர்த்துக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை - தற்போது பேச்சுக்களில் கலந்து கொண்டிருக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீம், கனடாவின் சமஷ்டி தொடர்பான நிபுணர் இயன் மார்ட்டினைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது.

கனடாவிலிருந்து இயன் மார்ட்டின் தலைமையிலான சமஷ்டி நிபுணர் குழுவொன்று, விசேடமாக நகொன்பத்தம் நகருக்கு வந்துசேர்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# காங்கேசனில் மீட்கப்பட்ட சடலம் காணாமற்போன மீனவருடையது!

## சகோதரர் அடையாளம் காட்டினார்!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் கரையொதுங்கிய சடலம், கடந்த 31 ஆம் திகதி வடமராட்சி கடலில் கடற்படை டோறாப் படகு மோதிய சம்பவத்தில் காணாமற்போன பொன்னன் ஞானேஸ்வரன் என்பவருடையதென அடையாளம் காணப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் அடையாளம் காணும்பொருட்டு வைக்கப்பட்டிருந்த சடலத்தை காணாமற்போன ஞானேஸ்வரனின் மூத்த சகோதரரான பொன்னன் மகேசன் அடையாளம் காட்டி பொறுப்பேற்றுக்கொண்டார்.

இடது கையில் காணப்பட்ட தழும்பும், வலது கையிலே கட்டப்பட்டிருந்த கறுப்பு நூலும் கடற்தொழிலுக்குச்செல்லும்போது இறுதியாக அணிந்து சென்ற நீலநிற ரீசேட்டையும் கொண்டு சடலத்தை அவர் இனங்காட்டினார்.

மரணவிசாரணையின் பின்னர் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

வடமராட்சிக் கடலில் நடைபெற்ற மேற்படி டோறா மோதிய சம்பவத்தில், பலியானவருடன் படகில் சென்றிருந்த தந்தையும் மகனுமான இரு கடற்தொழிலாளர்கள், இத்தாக்குதலில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவது தெரிந்ததே.

(கி,ரா)

# ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைப் போக்கு 1983 இற்குப் பின் புதியதாகியது!

## 'தூண்டி' நடாத்திய ஆய்வரங்கில் ரஞ்சகுமார் பேச்சு

(பளை)

தூண்டி இலக்கிய வட்டம் யாழ்.பல்கலைக்கழகக் கேட்போர் கூடத்தில் 'ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை' ஆய்வரங்கை ஞாயிறன்று நடத்தியது.




சிறுகதை ஆய்வரங்கில் கலந்துகொண்டோர்.

இரு அமர்வுகளாக நடைபெற்ற இவ்வாய்வரங்கில் - காலை அமர்வுக்கு பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமை வகித்தார்.

காலை அமர்வில் ஈ.குமரன் ஆய்வுரை நிகழ்த்தினர். இவரது ஆய்வுகள் சம்பந்தமான கருத்துரையை, ந.இராஜகோபால் நிகழ்த்தினார். தொடர்ந்து, மு.பொன்னம்பலம் ஆய்வுரை நிகழ்த்த, கலாநிதி செ.திருநாவுக்கரசு கருத்துரை வழங்கினார்.

மாலை அமர்விற்குப் பேராசிரியர் சு.சண்முகதாஸும், பேராசிரியர் நந்தியும் தலைமை தாங்கினர்.

இங்கு ஆய்வுரை நிகழ்த்திய எழுத்தாளர் ரஞ்சகுமார் - 1983 இனக்கலவரத்தின் பின்னர் சிறுகதை இலக்கியத்தின் போக்கு மாற்றமடைந்து புதிய வெளிப்பாட்டு உத்தியைப் பின்பற்றி இயங்கத் தொடங்கியது என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் -

சிறுகதைப் போக்கில் 1980 களில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதில் 'அலை' சஞ்சிகை முக்கிய பங்காற்றியது என்றும், இக்காலகட்டத்தில் எழுதுவதற்குத் தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது தனது எழுத்து முதன்மை பெறக் காரணமாகிவிட்டது என்றார்.

இவரைத் தொடர்ந்து கருத்துரை வழங்கிய எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் - எழுத்தாளனுக்கு மதமும், இனங்களும் தேவையில்லை. சிறந்த ஆளுமை தேவை என்றும், சாதாரண மக்களது அவலங்களைப் பதிவுசெய்வதில் சிறுகதைகள் முக்கிய இடம் வகித்து வருகின்றன என்றார்.

அடுத்ததாகக் கருத்துரை வழங்கிய கலாநிதி செ.யோகராசா : - அரச இராணுவ உக்கிரம் கூடிய காலகட்டம் 1990 காலப்பகுதி என்றும், இதன்போது - பொருளாதாரத்தடை, இடப்பெயர்வு, தமிழ்த் தேசியம் போன்றவை சிறுகதைகளில் முக்கியமாகப் பேசப்பட்டன என்றும்,

வன்னிப் பகுதி, சிறுகதை இலக்கியத்தில் முக்கிய தடத்தைப் பதித்த காலகட்டம் அது என்றார்.

தேடல் மிக்க படைப்பாளிகள் இக்காலகட்டத்தில் தோற்றம் பெற்றனர் என்றும் அவர் கூறினார்.

தொடர்ந்து கருத்துரை வழங்கிய பேராசிரியர் நா.சுப்பிரமணிய ஐயர்,

மனம் நிறைந்த மக்களாக வாழ்வதே இலக்கியம். எனவே, மனிதர்களாக வாழ்வது முக்கியம் என்று குறிப்பிட்டார். தொடர்ந்து, பல எழுத்தாளர்கள், அறிஞர்கள் தமது கருத்துக்களைக் குறிப்பிட்டனர். இறுதியில், தூண்டி இலக்கிய வட்ட செயலாளர் இ.இராஜேஸ் கண்ணா நன்றியுரை வழங்கினார்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## கிளிநொச்சியுடன் பளைப் பிரதேச கல்வி வலயம்

இதுவரைகாலமும் தென்மராட்சிக் கல்வி வலயத்துடன் இணைந்து இயங்கி வந்த பளை வலயக் கல்வித் திணைக்களம் - இவ்வருடம் முதல் கிளிநொச்சி மாவட்ட வலயக்கல்வித் திணைக்களத்துடன் சேர்ந்து இயங்க ஆரம்பித்துள்ளது.

## 71 இலங்கையர் திருப்பி அனுப்பப்பட்டனர்

இத்தாலிக்குச் செல்ல முயன்று சவூதிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 20 தமிழ் இளைஞர்கள் உட்பட 35 பேர் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்குத் திருப்பி அனுபப்பட்டுள்ளனர். முதலில் 36 பேர் கடந்த சனிக்கிழமை இலங்கைககுத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

## யுனிசெப் உதவியுடன் மலசலகூடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் மலசலகூடம் அமைக்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த ஆண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டத்துக்காக எழுபது மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (க)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சம்பந்தமான விபரங்கள், தற்போது இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தால் திரட்டப்பட்டு புத்தக வடிவில் வெளியிடப்படவுள்ளது.

இது தொடர்பாக நாளை பி.ப 5 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இதில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களையும் கலந்து கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாடாளுமன்ற சுருக்கெழுத்தாளர் போட்டிப் பரீட்சை

நடாளுமன்றத்தின் தமிழ் சுருக்கெழுத்தாளர் அறிக்கையாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான போட்டிப் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களின் நலன் கருதி வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் இலவச வேகப்பயிற்சி வகுப்புக்களை நடாத்தவுள்ளது.

இவ்வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் தமது பெயர் விபரங்களை தபால் மூலம் செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரி, கரவெட்டி, எனும் முகவரிக்கு இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கழகச் செயலாளர் சிவச்சந்திரதேவன் அறிவித்துள்ளார்.

## வெள்ளியன்று வெளிவாரிப் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புக்கள் அலகில், கடந்த 2000ஆம் ஆண்டு வர்த்தக மானிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள், எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியாகும் என்று பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (கி,ச)

## திருவுருவப் படத் திரைநீக்கமும் சஞ்சிகை வெளியீடும்

காலஞ்சென்ற பேராசிரியர் செ. பாலச்சந்திரனின் திருவுருவப்படத் திரை நீக்கமும், 'புவியியலாளன்' இதழ் சஞ்சிகை வெளியீட்டு விழாவும இன்று பி.ப. 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

## பூநகரிப் பிரதேச செயலகம் மீண்டும் பழைய இடத்தில்

(கிளிநொச்சி)

ஜெயபுரத்தில் இயங்கி வரும் பூநகரிப் பிரதேச செயலகம் மீண்டும் பழைய இடத்தில் செயற்படவிருக்கிறது.

அடுத்த வாரம் முதல் மேற்படி அலுவலகம் பூநகரியில் செயற்பட ஆரம்பிக்கும். 1991 ஆம் ஆண்டு முதல் இவ்வலுவலகம் ஜெயபுரத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுக்களற்ற கிணற்றில் விழுந்து ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

தோட்டத்திற்குச் சென்றவர் தவறுதலாகக் கிணற்றில் விழுந்து மரணமான சம்பவம் புன்னாலைக் கட்டுவன் தெற்கில் இடம்பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு, தோட்டத்தில் நடுகை பண்ணப்பட்ட புகையிலைக் கண்டுகளைப் பார்வையிடச் சென்ற நவரத்தினம் தம்பித்துரை (வயது - 81) என்பவரே கட்டுக்களற்ற கிணற்றுள் விழுந்து மரணமானவர் ஆவர். (கி,ச)

## தமிழர் ஆசிரியர் சங்க கூட்டத்தொடர்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள வலய மட்ட அமைப்புக்களுக்கான கூட்டத் தொடரில் - யாழ்.வலயத்திற்கான கூட்டம் நாளை பி.ப 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், வடமராட்சி வலயத்திற்கான கூட்டம் 13 ஆம் திகதி பி.ப 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயததிலும் நடைபெறவுள்ளதாக - சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

## விளம்பரத்துறை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

காவலூர் ராசதுறையின் விளம்பரத்துறை பற்றியதான நூல் வெளியீட்டு விழா நாளை பி.ப 3 மணிகக்கு யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நூலின் வெளியீட்டுரையை முகாமைத்துவ வணிகபீட பீடாதிபதி மா.நடராஜசுந்தரமும், ஆய்வுரையை கலாநிதி என்.சண்முகலிங்கன், முகாமைத்துவத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி த.ரவீந்திரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

## பகுதிநேர விரிவுரையாளர்கள் விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தால் பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான முடிவுத் திகதி எதிர்வரும் 17 ஆம் திகதி எனவும், இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு- பணிப்பாளர், யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனம் எனும் முகவரியில் தொடர்புகொள்ளும்படி - நிறுவனப் பணிப்பாளர் ஆர்.இராஜரட்ணம் அறிவித்துள்ளார்.

## கட்டாக்காலி நாய்களால் மக்கள் படும் சிரமம்!

(ஆவரங்கால்)


அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதால் அப பகுதிகளால் பயணம் செய்யும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், பாதசாரிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருநாளைக்குச் சராசரியாக 15 பேர் வரையில் கட்டாக்காலி நாய்களால் கடியுண்டு - அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சை பெறறுச் செல்வதாக - வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


இவற்றைத் தடுப்பதற்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (80)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்



# மாணவர் மலர்



## வினாப்பத்திரம் 1



### ✦ காரண காரியங்களை இனங்காணல் (IDENTIFICATION OF CAUSE AND EFFECT)

✷ கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.

1. அஜித் தரம் 5 இல் கல்விகற்கும் மாணவன் ஆவான். கடந்த மாதம் ஆரம்பம் முதல் அவன் பாடசாலைக்கு வரவில்லை. அஜித் பாடசாலைக்கு வராமைக்குக் காரணம் பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கும்?

   (1) காசு, பணம் இல்லாததால் அஜித் பாடசாலை போவதை நிறுத்திவிட்டான்.
   (2) வகுப்பு வேலைகள் கஷ்டமானபடியால் அஜித் ரியூசன் வகுப்புக்குப் போவதற்காகப் பாடசாலைக்குப் போவதை நிறுத்திவிட்டான்.
   (3) பாடசாலை வேலைகளில் குறைபாடுடைய அஜித் புலமைப் பரீட்சைக்கு ஆயத்தமாவதற்காகப் பாடசாலைக்குப் போவதை நிறுத்திவிட்டான்.

2. சரஸ்வதி மகாவித்தியாலயம் இம்முறை வலயங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்குக் காரணம் பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கலாம்?

   (1) சரஸ்வதி மகாவித்தியாலயம் கரப்பந்தாட்டத்தில் அடைந்துள்ள பிரபல்யம்.
   (2) விளையாட்டுக்குழு தினமும் பயிற்சியில் ஈடுபட்டமை.
   (3) விளையாட்டுச் செயற்பாடுகளில் பெற்றோரின் அக்கறை.

3. 'விருது' கிராமத்தின் மக்களிடையே அடிக்கடி பேதிநோய் பரவியது. அந்நோய் பரவுவதற்கு முக்கிய காரணமாய் அமைவது பின்வருவனவற்றுள் எது?

   (1) கிராம மக்களின் கல்வியறிவு குறைபாடு.
   (2) வைத்தியசாலை சிறிதாக இருத்தல்.
   (3) நீரைச் சுடவைத்துப் பருகும் பழக்கம் இல்லாமை.

4. நாளைய தினம் சூரிய வெயில் இல்லாவிட்டால், பின்வருவனவற்றுள் எது நடந்திட அதிக வாய்ப்பு உண்டு?

   (1) தொடர்ந்து மின்சார விளக்கு எரிந்துகொண்டிருக்கும்.
   (2) தொடர்ந்து இருட்டாக இருக்கும்.
   (3) மக்கள் தொடர்ந்து தூங்கிக்கொண்டிருப்பார்கள்.

5. நான்கு கால் விலங்குகள் யாவும் சோறு உண்ண ஆரம்பித்தால் அதன் விளைவாக உடனடியாக நடந்திட வாய்ப்புள்ளது பின்வருவனவற்றுள் எது?

   (1) மனிதர் அதிகமாக நெல் உற்பத்தி செய்தல்.
   (2) நெல்லுற்பத்தியில் புதியமுறை கண்டுபிடித்தல்.
   (3) அரிசித் தட்டுப்பாடு ஏற்படுதல்.

6. நாட்டிலுள்ள மரங்கள் யாவற்றையும் வெட்டி அழித்தால் ஏற்படக்கூடிய மிகப் பிரதான பாதிப்பு இவற்றுள் எது?

   (1) வீடுகள் கட்டப்படுவது நின்று விடும்.
   (2) மழை இல்லாமல் போய் வரட்சி உண்டாகும்.
   (3) பறவைகளுக்குக் கூடுகட்ட இடம் இல்லாமல் போகும்.

### ✦ தகவல்களின் ஒழுங்கமைப்பு (ORGANISATION OF INFORMATION)

✷ பாடசாலை விழா ஒன்றுக்கான நிகழ்ச்சி நிரலின் விடயங்கள் சில ஒழுங்கு மாற்றப்பட்டுக் கீழே காட்டப்பட்டுள்ளன.

A அதிபரின் உரை
B வரவேற்பு உரை
C நன்றியுரை
D அதிதிகளின் வருகை
E பரிசில் வழங்கல்
F பிரதம அதிதியின் உரை

நிகழ்ச்சி நிரலின் சரியான ஒழுங்கைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) B D C A E F
(2) A C E F D B
(3) D B A F E C

### ✦ பிரசினங்களைத் தீர்த்தல் (PROBLEM SOLVING)

✷ *சரியான விடையினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக*

1. 6 பசுக்கள் 6 சாக்குப் புல்லை 6 நாட்கள் தின்று முடிக்குமாயின், ஒரு பசு 6 சாக்குப் புல்லைத் தின்று முடிப்பதற்கு எவ்வளவு நாட்கள் எடுக்கும்?

   (.................................)

2. ஹரி 6.75 ரூபாய்க்கு அப்பியாசப் புத்தகங்களை வாங்கி, 10 ரூபாய்த் தாள் ஒன்றை வியாபாரியிடம் கொடுத்தான். மீதிப் பணமாக ஹரிக்கு ஒரு ரூபாய் நாணயம் 1 உம், ஐம்பது சத நாணயங்கள் 3 உம், 25 சத நாணயங்கள் சிலவும் கிடைத்தன. ஹரிக்குக் கிடைத்த 25 சத நாணயங்கள் எத்தனை?

   (.................................)

3. எனது நண்பர்களும் நானும் தீபாவளி வாழ்த்தட்டைகளைப் பரிமாறிக் கொண்டோம். இதன் பொருட்டு நாம் ஒவ்வொருவரும் மற்றைய ஒவ்வொருவருக்கும் வாழ்த்தட்டைகளை அனுப்பினோம். நாம் பயன்படுத்திய மொத்த வாழ்த்தட்டைகள் 20 ஆகும். எனக்கு எத்தனை நண்பர்கள் உள்ளனர்? (.................................)

4. இன்று திங்கட்கிழமை. நாளை மறுநாள் 16 ஆந்திகதி. சென்ற வெள்ளிக்கிழமை கண்ணன் தனது பிறந்ததினம் நேற்று எனக் கூறினான். கண்ணன் வாரத்தின் எந்தநாளிற் பிறந்தான் எனவும், அவன் பிறந்ததிகதி எது எனவும் எழுதுக.

   (1) நாள்.......................................................
   (2) திகதி.....................................................

5. மாலை 4 மணி அளவில் நான் நகரிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வரும்போது எனது நிழல் என்னைப் பின் தொடர்ந்து வந்ததாயின், நான் எந்தத் திசையை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்.?

   (.................................)

### ✦ அவதானிப்பு (OBSERVATION)

✷ ஆசிரியர் வரைந்த படத்தில் உள்ள சில அம்சங்கள் மாணவர் வரைந்த படத்தில் பிழையாகக் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய பிழையான இடங்களுள் ஐந்தை மாணவன் வரைந்த சித்திரத்திற் கண்டுபிடித்து, அவற்றைச் சுற்றி வட்டமிடுக.

**ஆசிரியர் வரைந்த படம்**




**மாணவர் வரைந்த படம்**




### ✦ மொழிபெயர்ப்பு (TRANSLATION)

✷ கீழே 1,2,3 ஆகிய இலக்கங்களில் மூன்று வாக்கியங்கள் காட்டப்படுகின்றன. அவ் ஒவ்வொரு வாக்கியமும் பிள்ளைகளின் முகங்கள் மூலம் சொற்களின் மேல் காட்டப்படுகின்றன. ஒரு சொல் ஒரு முகத்தின் மூலம் காட்டப்படினும், முகங்கள் சொற்களின் ஒழுங்கிலே காட்டப்படவில்லை.




இதன்படி கீழே காட்டப்பட்டுள்ள சொற்களுக்குரிய முகங்களைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1.நாளை
2.வீட்டுக்கு
3.நான்



(தொடரும்)

**வி.என்.எஸ்.உதயசந்திரன்**
B.A.BEd (Hons), Dip. In. Ed.

# க.பொ.த. உயர்தரம்

## புவியியல் எறியங்கள்

01. எறியங்கள் என்றால் என்ன?
மாதிரிப் புவிக்கோளத்தின் கற்பனைக்கோடுகளான அகலக்கோடுகளையும், நெடுங்கோடுகளையும் தட்டையான தளம் ஒன்றிற்கு மாற்றீடு செய்வதன் மூலம்பெறப் படுகின்ற வரைபடங்கள் எறியங்கள் எனப்படுகின்றன.

02. அகலக்கோடுகள் என்றால் என்ன?
புவியின் மேற்பரப்பில் மேற்குக் கிழக்காக வரையப் படும் ஒருமைய சமாந்தர வட்டங்களான கற்பனைக் கோடுகள் அகலக்கோடுகள் எனப்படும்.

03. அகலக்கோடுகளின் இயல்புகள் எவை?
i. ஒன்றிற்கொன்று சமாந்தரமானவை.
ii மத்தியகோட்டில் இருந்து முனைவை நோக்கிச் செல்லும்போது சுற்றளவு விகித சமனாகக்குறையும்.
iii. முனைவு ஒரு புள்ளியாகும்.
iv. அகலக்கோடுகளின் இடைவெளி சமனாகும்..

04. நெடுங்கோடுகள் என்றால் என்ன?
புவியின் மேற்பரப்பில் வடமுனைவையும் தென்முனை வையும் இணைத்து வரையும் அரைவட்ட விற்களான கற்பனைக் கோடுகள் நெடுங்கோடுகள் எனப்படுகின்றன.

05. நெடுங்கோடுகளின் இயல்புகள் எவை?
i. ஒன்றுக்கொன்று சமநீளமுள்ள அரைவட்டவிற்கள்.
ii. மத்தியகோட்டில் இருந்து முனைவை நோக்கிச் செல்லும்போது இடைவெளி சுருங்கும்.
iii. அகலக்கோடுகளைச் செங்குத்தில் வெட்டும்.
iv. 0° நெடுங்கோடும் 180° நெடுங்கோடும் ஒவ்வொருநெடுங் கோடுகளாகும்.

06. எறியங்களின் வகைகள் எவை?
i. உச்சி எறியங்கள்
ii. கூம்பு எறியங்கள்
iii. உருளை எறியங்கள்
iv. நியம எறியங்கள்

07. உச்சி எறியங்கள் எவை?
உச்சி எறியங்களை இருவகையாகப் பாகுபடுத்தலாம் அவையாவன:
1. உச்சிப் பார்வை எறியங்கள்
i. நிழற்கடிகார உச்சி எறியம்.
ii. திண்ம வரைபட உச்சி எறியம்.
iii. செங்குத்து வரைபட உச்சி எறியம்.
2. உச்சிப் பார்வையற்ற எறியங்கள்
i. சமபரப்பு உச்சி எறியம்
ii. சமதூர உச்சி எறியம்

08. கூம்பு எறியங்கள் எவை?
i. ஒரு நியம சமாந்தரக்கோட்டுக் கூம்பு எறியம்
ii. இரு நியம சமாந்தரக்கோட்டுக் கூம்பு எறியம்
iii. பொன்னின் எறியம்

09. உருளை எறியங்கள் எவை?
i. சமபரப்பு உருளை எறியம்
ii. சமதூர உருளை எறியம்
iii. மேகாற்றோவின் எறியம்

10. நியம எறியங்கள் எவை?
i. சைன் வளைகோட்டு எறியம்
ii. மொலுவீட்டின் எறியம்

11. எறியங்களின் பண்புகள் எவை?
i. பொதுப் பண்புகள்
ii. சிறப்புப் பண்புகள்

12. பொதுப்பண்புகள் என்றால் என்ன?
எறியம் ஒன்றில் அகலக்கோடுகள் எவ்வாறு அமைந்துள்ளன? நெடுங்கோடுகள் எவ்வாறு அமைந்துள்ளன? புவிக்கோளத்தினை முழுமையாகக் காட்டமுடியுமா? என்னும் வினாக்களிற்கான விடைகளே பொதுப்பண்புகள் எனப்படும்.

13. சிறப்புப் பண்புகள் என்றால் என்ன?
அளவுத்திட்டம் பேணப்படுகின்றதா? சமபரப்புப் பேணப்படு கின்றதா? நேருவம் பேணப்படுகின்றதா? மெய்த்திசை பேணப்படுகின்றதா? இலகுவாக அமைக்க முடியுமா? எனும் வினாக்களிற்கான விடைகளும் விளக்கங்களுமே சிறப்புப் பண்புகள் எனப்படுகின்றன.

14. அளவுத்திட்டம் பேணப்பட வேண்டுமாயின் எறியமொன்றில இருக்க வேண்டிய பண்புகள் எவை?
i. அகலக் கோடுகள் உண்மையான ஆரையுடன் (புவி அச்சிற்கும் அகலக்கோட்டுக்கும் இடையேயான தூரம்) வரையப்படல் வேண்டும். இதனால் அகலக்கோட்டு அளவுத்திட்டம் பேணப்படும்.
ii. அகலக்கோட்டு இடைவெளி உண்மையான பருதித் தூரத்துடன் வரையப்படல் வேண்டும். இதனால் நெடுங்கோட்டு அளவுத்திட்டம் பேணப்படும்.

15. சமபரப்புப் பேணப்பட வேண்டுமாயின் எறியம் ஒன்றில் இருக்கவேண்டிய பண்புகள் எவை?
i. அகலக்கோட்டு அளவுத்திட்டமும் நெடுங்கோட்டு அளவுத்திட்டமும் பேணப்படல் வேண்டும்.
*அல்லது*
ii. அக்லக்கோட்டு அளவுத்திட்டம் மிகைப்படும் விகிதத்திற்கு ஏற்றவாறு நெடுங்கோட்டு அளவுத் திட்டம் சுருங்குதல் வேண்டும்.
*அல்லது*
iii. அகலக்கோட்டு அளவுத்திட்டம் சுருங்கும் விகிதத் திற்கு ஏற்றவாறு நெடுங்கோட்டு அளவுத் திட்டம் மிகைப்படவேண்டும்.

16. நேருவம் பேணப்பட வேண்டுமாயின் எறியம் ஒன்றில் இருக்கவேண்டிய இயல்புகள் எவை?
i. அகலக்கோடுகளும் நெடுங்கோடுகளும் புவிக்கோளத்தில் உள்ளவாறே ஒன்றை ஒன்று செங்குத்தில் வெட்டுதல் வேண்டும்.
ii. அகலக்கோட்டு அளவுத்திட்டமும் நெடுங்கோட்டு அளவுத்திட்டமும் பேணப்பட வேண்டும்.
*அல்லது*
iii. அகலக்கோட்டு அளவுத்திட்டமும் நெடுங்கோட்டு அளவுத்திட்டமும் விகிதசமனாக மிகைப்படவேண்டும்.
*அல்லது*
iv. அகலக்கோட்டு அளவுத்திட்டமும நெடுங்கோட்டு அளவுத்திட்டமும் விகிதசமனாகச் சுருங்குதல்வேண்டும்.

(தொடரும்)

BY -
S.R.BALA
B.A (Hons)
Dip. In Ed.



# க.பொ.த.உயர்தர பொதுச்சாதாரணப் பரீட்சையை (C.G.T) இலகுவாக எதிர் கொள்வது எவ்வாறு?



க.பொ.த உயர்தரப் பரீட்சை 2000 AUG இல் இருந்து பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெறவுள்ள அனைத்து மாணவர்களும் கட்டாயமாகப் பொதுச்சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றுவதுடன் இதில் குறைந்தது 30% புள்ளிகளையேனும் பெற்றிருக்க வேண்டும் என - கல்வி, உயர்கல்வி அமைச்சுச் செயலாளரின் இ.க./103 இலக்கத்தையும், 98-07-31 ஆம் திகதியையும் கொண்ட 98/25 ஆம் இலக்கச் சுற்று நிருபத்திலே தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதற்கமைவாக, கடந்தகாலங்களில் நடைபெற்ற மூன்று பரீட்சைகளின்போதும் மாணவர்கள் தமது பாடத்துறையின் மூன்று பாடங்களில் 'A' தரச் சித்தியைப் பெற்று இப்பாடத்தில் மிகக் குறைவான புள்ளிகளைப் (30 புள்ளிக்குக் கீழ்) பெற்றமையால் பல்கலைக்கழக அனுமதியைப் பெற வில்லை என்பது வெளிப்படை. இப்பாரிய குறைபாட்டை நீக்கும் நோக்குடன் இப்பரீட்சையை மாணவர்கள் எவ்வாறு இலகுவர்க எதிர்கொள்வது என்பது பற்றிய விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

இப்பரீட்சையானது 5 தெரிவுகளைக் கொண்ட விடய வரிசையில் அமைந்த 60 பல்தெரிவு வினாக்களைக் (MCQ) கொண்டிருப்பதுடன், 100 புள்ளிகள், 21/2 மணித்தியால கால அளவையும் உடையதாகும். மேலும் இப்பரீட்சைக் கட்டமைப்பானது பின்வருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.
i. பொதுவிழிப்பு - 15 வினாக்கள் - 25 புள்ளிகள்
ii. பிரச்சினை தீர்க்கும் ஆற்றல் - 15 - வினாக்கள் - 25 புள்ளிகள்
iii. நியாயிக்கும் ஆற்றல் - 15 வினாக்கள் - 25 புள்ளிகள்
iv. கிரகிப்பதற்கும் தொடர்பாடலுக்குமான ஆற்றல் - 15 வினாக்கள் - 25 புள்ளிகள்

### A. பொதுவிழிப்பு

பொதுவிழிப்பு என இங்கு கருதப்படுவது தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்த எண்ணக்கருக்களும், தகவல்களும் பற்றிய சாதுரியமான விழிப்பாகும். பரீட்சைக்குத் தோற்றும் ஆண்டிற்கு முந்திய இரு ஆண்டுகளின்போது, பின்வரும் துறைகளில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பான எண்ணக்கருக்களும், தகவல்களும் இதன்கீழ் பரீட்சிக்கப்படும்.

### 1) பொருளாதாரம் (சர்வதேசம்)

*உ+ம்:-* அண்மையில் நடைபெறவுள்ள நேட்டோ மாநாட்டைத் தொடர்ந்து, நேட்டோ விஸ்தரிக்கப்படவுள்ளது. இதன் பிரகாரம் நேட்டோ கூட்டமைப்பில் புதிதாக ஏழு நாடுகள் இணையவுள்ளன. அவற்றுள் ஒன்று
(1) ஹங்கேரி (2) தாய்வான் (3) இந்தோனேசியா
(4) பல்கேரியா (5) ரஷ்யா

### பொருளாதாரம் (தேசிய)

*உ+ம்:-* அண்மையில் நடைமுறையிலிருந்த பொருட்கள் சேவைகள் வரிக்குப் (G.S.T) பதிலாகப் புதிதாகக் கொண்டு வரப்பட்ட வரிமுறை எது?
(1) தேசிய பாதுகாப்பு வரி
(2) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)
(3) உள்நாட்டு இறைவரி
(4) சுங்கத்தீர்வை வரி
(5) இறக்குமதிப் பண்டங்கள் வரி

### 2) அரசியல் (சர்வதேச)

*உ+ம்:-* அண்மையில் ஓர் நாட்டில் பணயக் கைதிகளும், பணயம் வைத்திருந்த தற்கொலையாளிகளும் ஒன்றாக நச்சு வாயு ஒன்றின் மூலம் கொல்லப்பட்டனர். அந்நாடு,
(1) அமெரிக்கா (2) ஈராக் (3) ரஷ்யா
(4) இந்தோனேசியா (5) பங்களாதேஷ்

### 3) சமூகவியல் (சர்வதேச)

உ-ம்:- 2002ஆம் ஆண்டின்போதும் மக்கள் மத்தியில் கொய்ஸி டனாகா, ஜிம்மி கார்ட்டர், இம்ரேகோர்திஷ் ஆகியோர் பிரபலமாக விளங்கினர். அவர்கள்,
1) அமெரிக்க ஜனாதிபதிகள்
(2) அரசியலறிஞர்கள்
(3) நோபல் பரிசு பெற்றோர்
(4) திரைப்பட இயக்குநர்கள்
(5) எழுத்தாளர்கள்



### 4) பண்பாடு (சர்வதேச)

உ-ம்:- 2003ஆம் ஆண்டு OCT-18 ஆம் திகதியன்று சமூக சமய அற்புதங்களைப் புரிந்த ஒருவருக்குப் புனிதர் பட்டத்தை வழங்குவதற்கு முன்பாக, அவரைக் கௌரவித்து பெருமைப்படுத்தும் வைபவம் ஒன்று பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரால் நடாத்தப்பட உள்ளது. அப்பட்டத்தைப் பெறுபவர்.
(1) அப்துல்கலாம் (2) ஜோஜ் W.புஷ் (3) இளவரசி டயானா (4)அன்னை தெரேஸா (5) நெல்ஸன் மண்டேலா

### 5. விளையாட்டு (சர்வதேச)



உ+ம்:- 2002ஆம் ஆண்டு மே, யூன் மாதங்களில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் பங்கு பற்றிய இரு அணிகளும் எவை?
1. பிரேஸில் - பிரான்ஸ்
2. பிரேஸில் - செனகல்
3. பிரேஸில் - பெல்ஜியம்
4. பிரேஸில் - ஜேர்மனி
5.பிரேஸில் - துருக்கி

### 6. விஞ்ஞானம் (சர்வதேச)



உ+ம்:- கண்டம் விட்டு கண்டம் தாவும் அக்னி ஏவுகணையைக் கண்டுபிடித்து உலகப் புகழ் பெற்ற அணு விஞ்ஞானி தற்போது எந்நாட்டின் ஜனாதிபதியாவார்.
1. ரஷ்யா 2. ஈராக் 3.இந்தியா
4. அமெரிக்கா 5. பிரான்ஸ்

(தொடரும்...)

*ஆக்கியோர்:-*
P.கமல்தாஸன் & P.உமாசங்கர்
B.A, Spl.Trd com, Dip in Mgt (OUSL) - B.Com,
Spl.Trd com C.B.F (LON)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல் - *திருக்குறள்*

# நமது நோக்கு

## மக்களுக்கானதே அமைதி!

கடந்த இரண்டு தசாப்த காலங்களாக போரின அகோரக் கரங்களுக்குள் சிக்குண்டு, தமது வாழ்வில் பல வழிகளிலும் பாதிப்பைச் சம்பாதித்து வைத்திருக்கும் மக்களுக்கான, உடனடித் துயர் துடைப்புப் பணிகள் செயலாக்கம் பெற வேண்டுமென்பதை - தலைவர் வே.பிரபாகரன் வலியுறுத்தியிருக்கிறார்.

தனியே இணக்கப்பாடுகளுடன் மட்டும் இவ்விடயத்தில் நின்றுவிடாமல் - மக்களுக்கான அவசர, மனிதாபிமானத் தேவைகளை, புனர்வாழ்வுப் பணிகளை உடனடியாக நடைமுறைப்படுத்துவது பற்றி உறுதியான முடிவுகளை எட்டுமாறு - பேச்சுக்களில் கலந்து கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு அவர் பணித்திருக்கின்றார்.

போர் ஓய்ந்து ஒரு வருடம் ஓடிச்சென்றுவிட்ட நிலையில் - போக்குவரத்து மற்றும் பொருட்கள் விநியோகம் ஆகிய விடயங்களில் மட்டுமே, வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஓரளவுக்கு சமாதானத்தின் பயன்களைப் பெற்றிருக்கின்றனர்.

ஏனைய சகல விடயங்களிலும் - அங்கொன்றும் இங்கொன்றுமான தளர்வுகளைத் தவிர - தென்னிலங்கை மக்கள் அனுபவிக்கும் சமாதானத்தின் பெறுதிகளோடு ஒப்பிடுகையில் - மிகக் குறைந்தளவிலேயே- தமிழ்மக்களுக்கு அமைதியினால் ஏற்படுத்தப்பட்ட இயல்பு வாழ்க்கை கிட்டியிருக்கிறது.

போரினால் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழ்ந்துவரும் ஆயிரக்கணக்கானோர் இன்னமும் வீடு திரும்பவில்லை.

மீளக்குடியமரும் வாய்ப்புக் கிடைத்த பகுதிகளுக்குச் சென்றோருக்கு மீளத் தம் வாழ்வை ஆரம்பிப்பதற்கான துணையோ, உதவிகளோ இதுவரை வழங்கப்படவில்லை.

ஒப்புக்குச் சப்பாணியாக, மீளக்குடியமர வருவோருக்கு பதினைந்தாயிரம் ரூபா மட்டுமே அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. இதுவும் முற்றுமுழுதாக வழங்கப்படவில்லை.

இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான தமது சொத்துக்களை, பயன்தரும் வளங்களை, தொழில் வாய்ப்பை - இராணுவத்தாக்குதல்களால் இழந்து- அமைதிக் காற்றைத்தானும் சுவாசிப்போமென முயலும் தமிழ் மக்களுக்கு, அவர்களது புனர்வாழ்வுக்கு - இதுவரை அரசாங்கத்திடமிருந்து தீர்க்கமான உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

மாறாக - மீள்குடியமர்வைத் தடுக்கும் இராணுவப் பிரசன்னமும், நீக்கமற நிறைந்துள்ள இராணுவ முகாம்களும் - காவலரண்களும், கெடுபிடிகளும் - இன்னமும் - யுத்தத்தின் வாடை நீங்கிவிடவில்லை என்பதைக் கூறுவனவாகவே இருக்கின்றன.

இந்தநிலையில் - மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் மீதான நம்பிக்கை தமிழ் மக்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டுமெனில், சொல்லுவதை விட்டு செயலில் இறங்கத் தயாரான நிலைக்கு அரசாங்கம் வரவேண்டியது கட்டாயமாகும்.

ஒரு புறம் மக்களது அவல வாழ்வும், நீங்காத நெருக்கடிகளும் தொடர்கதையாக - மறுபுறம் - வெறும் உறுதிப்பாடுகள் மட்டுமே வெளியிடப்பட்டு வருவதை - தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற உண்மையை அரசாங்கம் உணர்ந்து கொண்டாலன்றி - 'சமாதானம்' வெறும் பேச்சளவிலேயே அமைந்து விடுமென்பது திண்ணம்.

இந்நிலையில் மக்களின் அவசியத் தேவைகள் உடன் நிறைவேற்றப்படவேண்டும் என தேசியத் தலைவர் வலியுறுத்தியிருப்பது, மனிதாபிமானப் பணிகளுக்கான நடைமுறைச் செயலாக்கத்தையும்- சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளையும்- காலதாமதமின்றி மேற்கொள்ள வேண்டியதின் உடனடித் தேவையை அழுத்தமுடன் எடுத்துச் சொல்லியிருக்கிறது.

# சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக சந்திரிகா-ரணில் பேச்சில் இணக்கம்!

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு





(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணக்கப்பாட்டுக்கு வந்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த வெள்ளியன்று சந்தித்துப் பேசியபோதே, இந்த இணக்கம் எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதில், பேச்சுவார்த்தைகள் தொடர்பாக முரண்பாடுகள், பிரச்சினைகள் குறித்துப் பேசித் தீர்க்கலாம் எனவும், பேச்சு வார்த்தைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கத்துடன் கலந்துரையாடியே கருத்துக்களை வெளியிடுவார் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதையடுத்து இந்தச் சந்திப்புக் குறித்த விபரங்களை, பொ.ஐ. மு. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா எடுத்து விளக்கியிருப்பதாகவும் ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## றோஸ் கார்டினில் நட்டமரம் நன்கு தளைத்து வளர்கிறது

(நகொன் பத்தம்)

பசுமை மிக்க நகொன் பத்தம் நகரில் - இலங்கை அரசாங்க மற்றும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

தாய்லாந்து நாட்டில் பூக்கள் பூத்துக்குலுங்கும் காலமான இப்போது - பேச்சுக்கள் நடைபெறும் றோஸ்காடின் ஹோட்டலைச் சூழவும் ரோஜாச் செடிகளில் பூக்கள் நிறைந்து காணப்படுகின்றன.

அரச மற்றும் புலிகளின் பிரதிநிதிகள் பேச்சுக்கள் நடைபெறும் இடத்துக்கு அருகிலேயே தங்கியிருப்பதால், நடந்தே செல்லக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை 2ஆம் சுற்று பேச்சுக்களில் கலந்த கொண்ட அரச, புலிகள் பிரதிநிதிகள் நட்ட றுபஸ்ட் மரம் நன்கு தளைத்து வளர்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## புகையிலைக்கு நீர் ஊற்றச் சென்ற யுவதி கிணற்றில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

புகையிலைக்கு தண்ணீர் ஊற்றச் சென்ற யுவதி கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை மானிப்பாயில் இச்சம்பவம் நடைபெற்றது.

மானிப்பாய் ஆனந்தா வீதியை சேர்ந்த செல்லத்துரை றஜீதா (வயது 22) என்ற யுவதியே சடலமாக மீட்கப்பட்டவராவர்.

அன்றைய தினம் வீட்டுக்கு அருகிலிருந்த தோட்டத்தில் புகையிலைக்குத் தண்ணீர் ஊற்றுவதற்காகச் சென்றவர் திரும்பாததால் அவரைத் தேடிச் சென்றபோது, தோட்டக் கிணற்றில் சடலமாக காணப்பட்டார்.

சடலம் மீட்கப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, விசாரணையின் பின் உறவினாகளிடம் கையளிககப்பட்டது.

# ஓட்டோவை வழிமறித்த இருவர் சாரதி மீது கோடாரியால் வெட்டு

## சனநெருக்கடி மிக்க நாவலர் வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பயணிகளை ஏற்றிச்சென்ற ஓட்டோ, இனந்தெரியாதோரால் வழிமறிக்கப்பட்டு சாரதி மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் அவா படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை மூன்று மணியளவில் நாவலர் வீதியில் இச்சம்பவம் நடைபெற்றது. இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த சிவகுமார் மயூரன்(வயது 19) என்ற இளைஞனே தாக்கப்பட்டு படுகாயமடைந்தவராவார்.

யாழ். நகரிலிருந்து பயணிகளை ஏற்றிவந்த மேற்படி இளைஞனின் ஓட்டோவை நாவலர் வீதியில் இரு இளைஞர்கள் வழிமறித்தனர். சாரதியை வெளியே இழுத்து கோடாரியினால் தாக்கியுள்ளனர். இதனால் தலைப்பகுதியில் பலத்த காயமடைந்த இளைஞன் மயக்கமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ச,கி)

# சுன்னாகம், சித்தங்கேணியில் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், சித்தன்கேணிப் பகுதிகளில் இந்தவருட நடுப்பகுதியில் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இப்பரிவர்த்தனை நிலையங்களை அமைப்பதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. அத்துடன் இப்பகுதிகளில் இருந்து பலர் தொலைபேசி இணைப்புக்களை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள போதிலும், பரிவர்த்தனை நிலையங்கள் அமைக்கப்பட்ட பின்னரே கூடுதலான தொலைபேசி இணைப்புக்கள் வழங்குவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொலைத்தொடர்பு சேவை அத்தியாவசிய தேவைகளில் முதன்மையானதாக இருப்பதனால், பல பகுதிகளிலும் இருந்து மக்கள் தொலை பேசி இணைப்புக்களை பெறுவதற்கு விண்ணப்பித்து விட்டு காத்திருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச,கி)

## சமஷ்டி மூலம் நாட்டைத் துண்டாட பிரதமர் ரணில் வழி செய்துவிட்டார்

### தொலைக்காட்சி உரை பற்றி மங்கள சமரவீர

(கொழும்பு நிருபர்)

சமஷ்டி என்ற பெயரில் நாட்டைத்துண்டாடுவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழிசெய்துள்ளார். அவரது நாட்டு மக்களுக்கான தொலைக்காட்சி உரையில் அதை அவதானிக்க முடிந்துள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பிரதமர் பல வாக்குறுதிகளை வழங்கியிருப்பதாகவும் அவை நிறைவேற்றப்படாமை குறித்துப் பேச்சுக்களில் எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும் தெரிவித்த மங்கள சமரவீர-

சமஷ்டி முறை ஆட்சி ஏற்பட்டால் நாடு பிளவுபடுவதை தடுக்கமுடியாது எனவும் மேலும் தெரிவித்தார்.

## வளவைத் திருத்தியபோது திடீரென வெடித்த மிதிவெடி

### சாவகச்சேரியில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுவளவை துப்புரவு செய்தபோது அங்கு புதைந்து கிடந்த கண்ணிவெடி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தில் டச்சுவீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த பொன்னம்பலம் (வயது 51) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மண்வெட்டியைக் கொண்டு நிலத்தை துப்பரவு செய்தபோதே புதைந்திருந்த மிதிவெடி வெடித்தது. இதனால் - இவரது உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டன.

(கி,ரா,34)

# "அரசாங்கத் தொழில்" மாயையிலிருந்து விலகி எமது மண்ணிலேயே தொழிலதிபர் ஆகலாம்!

***கடற்தொழிலாளர்களுக்கு உதவும் பொருட்டு, பருத்தித்துறையில் கண்ணாடியிழைப் படகுத் தொழிற்சாலையொன்றை நடாத்தி வருகின்றார் தொழிலதிபர் அ.தேவகுமார். தொழிற்திணைக்களம், ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனம் என்பவற்றால் பயிற்றப்பட்ட இவர்- ஏற்கனவே மன்னாரில்-பிளாஸ்ரிக் படகு உற்பத்தி, நன்னீர் மீன் வளர்ப்பு, தாமரை வளர்ப்புத் திட்டம் ஆகியவற்றிலும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.***

*கேள்வி:-* உங்களுடைய தொழில் திட்டங்கள் பற்றிச் சொல்லுங்கள்?

*பதில்:-* மன்னார் பிரதேசத்தில் படகு உற்பத்தி நிலையத்தை ஆரம்பித்துக் கடந்த வருடங்களாக நடாத்தி வருகின்றேன். இந்த நிறுவனத்துடன் அரசமானியத்துடன் மீன் வளர்ப்புத் திட்டம், தாமரை வளர்ப்புத் திட்டம் என்பவற்றையும் மேற்கொண்டு வருகின்றேன். தற்போது, பருத்தித்துறையில் கண்ணாடி இழைப்படகு உற்பத்தி நிலையத்தினை ஆரம்பித்துள்ளேன்.

*கேள்வி:-* நீங்கள் இந்த நிறுவனத்தைக் குடாநாட்டில் ஆரம்பித்த தன் நோக்கம் பற்றி?

*பதில்:-* கடந்த காலயுத்த நடவடிக்கையினால் குடாநாட்டில் அமைந்திருந்த பெரும்பாலான தொழிற்சாலைகள் அழிந்துவிட்டன. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கடற்தொழிலாளர்கள் ஆழ்கடல் தொழிலில் ஈடுபடத் தற்போது அனு மதிக்கப்பட்டுள்ளது. கடற்தொழில் தடையினால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் பெரும் முதலீடுகளைச் செய்து, தொழிலினை முன்னேற்ற முடியாத நிலையில் திண்டாடுகின்றனர். எமது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய கடமைப்பாடு எனக்கு உண்டு. அந்தவகையில், எனது பிறந்த ஊரான பருத்தித்துறையில் இந்தத் தொழிற்சாலையினை ஆரம்பித்துள்ளேன். இதன் ஊடாக இங்குள்ள மக்கள் அனைவருக்கும் என்னால் முடிந்தளவு உதவ முனைந்து வருகின்றேன்.



இங்கே உற்பத்தியான வள்ளம் ஒன்று

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளருக்குப் புதிதாகத் தமது தொழிலினை ஆரம்பிக்க 3 இலட்சம் முதல் 30 இலட்சம்வரை தேவையாக இருக்கின்றது. இந்த பெருமளவு நிதியினை முதலீடு செய்வதற்கு அவர்களிடம் நிதி வசதி இல்லை. வங்கிகளோ சேமிப்பை மட்டும் நோக்காகக் கொண்டு இயங்கி வருகின்றன.

வங்கிகளில் கடன்களைக் கேட்டால் புதிய நடைமுறைகளை முன்வைத்து, உதவுவதற்குப் பின்னடித்து வருகின்றனர்.

இதனாலே, கடற்தொழிலாளர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, அவர்களை முன்னேற்ற வேண்டும் என்பதற்காக இந்த நிறுவனத்தை இங்கு ஆரம்பித்துள்ளேன்.

*கேள்வி:-* நீங்கள் எந்தவகையான கடற்தொழில் வள்ளங்களை உற்பத்தி செய்கின்றீர்கள்?

*பதில்:-* குல்லா என்று சொல்லப்படும் கடலில் பாவிக்கும் வள்ளம். இது 18 அடி நீளமானது. இதனை மன்னாரில் உள்ள எமது நிறுவனம் உற்பத்தி செய்து 26,000 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றது.

இதனைவிட 25 அடி நீளமான வள்ளங்களை உற்பத்தி செய்து வருகின்றோம். இந்த வள்ளம் களங்கட்டித் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதனுடைய விசேட தன்மை, எட்டு குதிரைவலுக் கொண்ட இயந்திரம் தொடக்கம் 15 குதிரை வலுக்கொண்ட இயந்திரம்வரை இவ் வள்ளத்துடன் இணைத்து பயன்படுத்தமுடியும். வேகமும் அதிகமானது. 800 கிலோ முதல் 900 கிலோ வரையான மீன்களைக் குறித்த நேரத்திற்குள் ஏற்றிக்கொண்டுவர முடியும். கொழும்புபோன்ற பகுதி களில் உள்ள வள்ளங்களைவிட, இது பாதுகாப்பானது. இதனால், கடலில் விபத்துக்கள் ஏற்படுவதும் குறைவாக இருக்கும். மன்னார் பிரதேசத்தில் 90 வீதமான கடற்தொழிலாளர்கள் இவ்வாறான வள்ளங்களையே விரும்பிப் பாவித்து வருகின்றனர்.

மன்னாரில் **Clutch Model Boat** உற்பத்தி செய்கிறோம். அதன்மூலம் யாழ்ப்பாணத்திற்கு இரண்டரை மணி நேரத்திற்குள் 18 குதிரை வலு இயந்திரத்தின் உதவியுடன் வந்து சேரமுடியும் எரிபொருள் செலவு குறைவு. இதனால் இதன் பாவனை அதிகமாக உள்ளது.

யாழ்.குடாநாட்டில் இரண்டு வகையான வள்ளங்களை உற்பத்தி செய்து வருகின்றோம். 19 அடி 4 அங்குலம் கொண்ட வள்ளம். இது ஏனைய வள்ளங்களைவிட வேகம் கூடியது. இரண்டாயிரம் கிலோகிராம் பாரத்தை ஏற்றமுடியும். கடலில் தண்ணீர் அடிப்பது குறைவு. திருக்கை வலை, ஏழு அங்குல வலைகளுக்கு இவை பயன்படுத்தப்படும். அறக்கொட்டியான் போன்ற சிறு தொழிலுக்கு, சீநோர் படகினை ஒத்த தரத்திலான படகும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

*கேள்வி:-* இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்குப் பாரியளவு நிதி தேவைப்பட்டிருக்கும். இந்த நிதியுதவியை எந்தவகையில் பெற்றீர்கள்?

*பதில்:-* எம்மிடம் பெரியளவு நிதி இல்லாதபோதும், இத்திட்டத்தினைக் குடாநாட்டில் ஆரம்பிப்பதற்கு முயற்சித்தவேளை, கொழும்பில் உள்ள எவ்.ஆர்.ரி நிறுவனம் எமக்குத் தேவையான மூலப்பொருட்களைத் தந்தது. என்றாலும், தற்போது நிறுவனத்தின் உற்பத்தியினைத் துரிதப்படுத்திக் கொண்டுசெல்ல எமக்கு நிதி ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. இந்த நிறுவனத்தை இங்கு ஆரம்பித்தபோது வங்கிகளோ வேறு எந்த நிதி நிறுவனமோ உதவ முன்வரவில்லை. வங்கிகளைக் கடன் கேட்டால் பல விதிமுறைகளை விதித்து கடன் வழங்குவதில் இழுத்தடித்து வருகின்றன. தென்னிலங்கையில் முதலீட்டாளர்கள் தொழிலை ஆரம்பிப்பதற்கு வங்கிகள் பெருமளவில் உதவி வருகின்றன. வடக்கு- கிழக்கில் மாத்திரம் வங்கிகள் நிதியுதவி செய்ய பின்னடிக்கின்றன. புதிய முதலீடுகளைக் கொண்டு உற்பதகியினை ஆரம்பிப்பவர்களுக்கு இது பெரும் தடைக்கல்லாக இருந்து வருகின்றது. வங்கிகள் பெருமளவில் நிதியுதவி செய்யுமானால் யுத்தத்தால் அழிந்த எமது பிரதேசத்தில் பாரிய தொழிற்சாலைகளை நிறுவி, வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்க முடியும். இதன்மூலம் நலிவுற்றுள்ள எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்.





*கேள்வி:-* தொழிற்சாலைக்கான மூலப்பொருட்களை எப்படிப் பெறுகிறீர்கள்?

*பதில்:-* நிறுவனத்திற்குத் தேவையான மூலப்பொருட்களை வெளிநாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யவேண்டும். இதற்கு வங்கிகளோ அல்லது நிதி நிறுவனமோ உதவினால்தான் அது இலகுவான காரியமாகும். வெளிநாட்டு மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு தொழில் செய்ய முடியுமானால், படகுகளின் விலையினை தற்போதைய விலையிலும் 15 வீதத்தினால் குறைக்க முடியும். இதனால் கடற்தொழில் சமூகத்திற்கு நன்மை கிடைக்கும்.

*கேள்வி:-* உங்கள் நிறுவனம் கடற்தொழிலாளருக்கு எத்தகைய விதமான கடன் திட்டத்தில் படகுகளை வழங்கி வருகின்றது?


*பதில்:-* வடமராட்சி வடக்கு மற்றும் வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் கீழ்,அவர்களது சிபார்சு அடிப்படையில் கடனடிப்படையில் வள்ளங்களை வழங்குகின்றோம். ஆரம்பத்தில் படகினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது - 60 ஆயிரம் முதல் 65 ஆயிரம் ரூபா செலுத்திப் பதிவு செய்ய வேண்டும். ஒரு மாதகாலத்திற்குள் அவர்களுக்குப் படகு வழங்கப்படும். பின்னர் - மாதாந்தம் தவணைப்பணமாக ஐந்தாயிரம் ரூபா செலுத்த வேண்டும்.

*கேள்வி:-* உங்கள் படகுகளின் தரம் உறுதிப்படுத்தப்பட்டதா?

*பதில்:-* நூறு வீதமான தரமான படகினைத் தயாரித்து வழங்குகின்றோம் என்ற திருப்தி எமது ஆன்மாவில் இருக்கின்றது. கடற்தொழிலாளி எம்மிடம் படகைக் கொள்வனவு செய்யும்போது - ஒரு இலட்சம் ரூபா முதலிட்டுப் படகினைக் கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. 65 ஆயிரம் ரூபாவுக்குப் படகினைப் பெற்று, தொழிலை ஆரம்பித்துவிட்டு - மிகுதிப்பணத்தில் ஏனைய உபகரணங்களை வாங்கி தொழிலை வளப்படுத்த முடியும். இதன்மூலம் நலிவுற்ற தொழிலாளர்கள் பெரும் முதலீடுகளின்று தொழிலை ஆரம்பிக்கமுடியும்.

*கேள்வி:-* இன்றைய இளம் சமூகத்தினர் அரசாங்கத் தொழில்களையே பெரிதும் எதிர்பார்த்துக் காணப்படுகின்றனர். இவர்களுக்குத் தங்கள் தொழில் அனுபவ வாயிலாகக் கூறும் ஆலோசனை என்ன?

*பதில்:-* இன்றைய இளம் சமூகத்தின் துயரநிலை என்னவென்று சொன்னால், பத்து இலட்சம் செலவழித்துக் கனடாவிற்குச் சென்றால் அங்கிருந்து ஒரு இலட்சம் அனுப்பலாம் என்ற எதிர்பார்ப்புக் காணப்படுகின்றது. ஆனால், இவர்கள் கூலித் தொழிலாளர்களைக் கொண்டு வீட்டில் செய்யும் வேலைகளையே அங்கு செய்யப் போகிறார்கள். அதனைக் கௌரவமாக எண்ணும் துர்ப்பாக்கியநிலையே இளையசந்திக்கே ஏற்பட்டுள்ளது.



தொழிலதிபர். அ.தேவகுமார்

இந்தப் பத்து இலட்சம் ரூபாவைக் கொண்டு, எம் தாயகப்பகுதியில் முதலிட்டால், கனடாவில் சிரமப்பட்டு உழைப்பதிலும் பார்க்க, இங்கு கூடுதலான அளவு பணம் சம்பாதிக்கலாம். மேலும் தொழில் வளங்கள் நிறைந்த பூமி எம்பூமி. இன்னும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் மண்ணுக்கு விசேட தொழில் செய்யக்கூடிய புவியியல் அமைப்பும் வளமும் சாதகமாக உண்டு. இதனைப்பயன்படுத்தித் தொழிற்பட்டால்- எண்பத்து மூவாயிரம் பேர் இங்கு வேலைவாய்ப்பற்று இருக்கின்றனர் என்ற பாதகநிலை ஏற்படாது.

இன்றைய இளைஞர், யுவதிகளிடம் தன்னம்பிக்கையை வளர்ப்போமானால், அவர்களுக்கு எத்துன்பம் வந்தாலும், அதனை எதிர்நீச்சல் போடக்கூடிய ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்கள். இதன் மூலம் அவர்கள் மனதில் இருக்கின்ற அரச உத்தியோகம் என்ற மாயையை அகற்ற முடியும், அறுத்தெறிய முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**நேர்காணல்:**
**சந்திரமோகன்**

---

# காரைநகரில் 4 கோடி செலவில் பனஞ்சாராய உற்பத்தி நிலையம்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் பனஞ்சாராய உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் பனந்தொழில் வல்லுநர்களால் உற்பத்தி செய்யப்படும் மேலதிக கள் ஊற்றப்படுகின்றது. இதனால் பனந்தொழில் வல்லுநர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இதையடுத்து அதிகளவு கள் உற்பத்திக் காலங்களில் கள்ளினை பனஞ சாராயம் செய்வதற்கான வடியைச் சேகரித்து வைத்து, பனஞ்சாரயம் உற்பத்தி செய்யப்படவிருக்கின்றது.

திக்கம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் பனஞ்சாராயத்திற்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் தென்னிலங்கையில் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்த முடியும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்து கலாசார அமைச்சினால் அமைக்கப்படும் இவ்வடிசாலையை அமைப்பதற்காக, அமைச்சினுடைய விசேட நிதியிலிருந்து நான்கு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ச,கி)

# யாழ்.கலைப் பீடத்துக்கு 193 மாணவர்கள் சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2002/2003 கல்வியாண்டிற்குத் தெரிவு செய்யப்பட்ட கலைப்பீட மாணவர்களின் பெயர் விபரங்களைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சைப் புள்ளியடிப்படையில் 193 மாணவர்கள் கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய பாடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட 461 மாணவர்களுடைய பெயர் விபரம் கடந்த வெள்ளியன்று வெளியாகியிருந்தது.

கலைப்பீடத்திற்குத் தெரிவானவர்களுடைய பெயர் விபரங்கள் பல்கலைக்கழகப் பரீட்சைகள் அலகில் பார்வையிடலாமெனப் பதில் பதிவாளர் திருமதி அனுசா சிவநேசன் தெரிவித்தார். (ச,கி)

# கிளிநொச்சி வெள்ளப் பாதிப்பு நட்டஈடு வழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈட்டுக்கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான நடவடிக்கைகளில் கிளிநொச்சி அரச செயலகம் ஈடுபட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்கனவே உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. (க)


# மீளக் குடியமர்வு கொடுப்பனவு 'நிகொட்' ஊடாக வழங்கப்படும்

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவுகள் 'நிகொட்' அமைப்பினூடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

கடந்தவாரம் வட- கிழக்கு மாகாணசபை அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. மேற்படி கொடுப்பனவு வழங்குவது தொடர்பாகவும், வட- கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் ஏனைய புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

வட -கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்த பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (க)


# நகொன்பத்தம் பேச்சுக்களில் சில புகைப்படப் பதிவுகள்







பேச்சுக்கள் முடிவடைந்த பின்னர் ரீ.ரீ.என் தொலைக்காட்சிக்கு
செவ்வியளிக்கும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்,
உடன் கேணல் கருணா, தமிழ்ச்செல்வன்

புகைப்படப் பதிவுகளுக்கு ஓர் வாய்ப்பு
படத்தில்- சொல்ஹெய்ம், ரவூப் (சற்றே மறைந்து), மிலிந்த,
தமிழ்ச்செல்வன், ஹெல்கிசன், பாலா, திருமதி பாலா, கருணா.





தாய்லாந்தின் நகரப் பொலிஸ்பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரி
லெப். ஜெனரல் பிக்கிட் குவான்டாஜாகுப், பேச்சுவார்த்தைப் பிரதிநிதிகளைச் சந்திக்கின்றார்.
இவரின் கீழுள்ள அதிகாரிகளே பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு அளித்துவருகின்றனர்.


பேச்சுவார்த்தை அறைக்குள் செல்லும்
ஒஸ்ரின் மற்றும் மிலிந்த.

(1) பேச்சுவார்த்தை நடைபெறும்
றோஸ் கார்டின் ஹோட்டேலுக்கு
பாதுகாப்புடன் வந்துசேரும்
அமைச்சர் பீரிஸ்.

(2) பேச்சுக்களுக்கு நடுவே கிடைத்த
ஓய்வு நேரத்தில்
கலந்தாலோசனையில் ஈடுபடும் நோர்வே
நாட்டின் மத்தியஸ்தக் குழுவினர்.

(3) அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர்
பேனாட் குணதிலக,
நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்குடன்
உரையாடுகின்றார்.

படங்கள் - *அலெக்ஸ்*









நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நாட்டை துண்டாடும் முயற்சியை பௌத்த குருமார் முறியடிப்பார்கள்

## பௌத்த மதகுருக்கள் சம்மேளனம் அறிவிப்பு

### உயர் பாதுகாப்பு வலயங்கள்

# செஞ்சிலுவைச் சங்க அதிகாரி புலிகளிடம் விளக்கம் பெற்றார்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப்பிரதிநிதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான முழுமையான விளக்கங்களையும் புலிகளின் யாழ். அரசியற்துறை பொறுப்பாளர் இளம்பரிதியிடமிருந்து நேற்றுப் பெற்றுக்கொண்டார்.

இச்சந்திப்பின்போது- குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான சகல விளக்கங்களும் வரைபடங்களின் உதவியுடன் விளக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த வருடம் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் வட- கிழக்கில் தனிநிர்வாக அலகு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக பௌத்த மதகுருக்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சமாதானம் என்ற போர்வையில் விடுதலைப் புலிகளுக்கு தனிஅரசு வழங்குவதற்காக நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் -

சமாதான நடவடிக்கைகள் மூலம் பொதுமக்கள் ஏமாற்றப்பட்டிருப்பதாகவும் அந்தச்சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நாட்டைத்துண்டாட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை பௌத்த குருமார் முறியடித்திருப்பதாகவும், தற்போது அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது என்றும்- பௌத்த மதகுருமார் சம்மேளனம் மேலும் தெரிவித்துள்ளது.

இதைக்கருத்திற் கொண்டு ப[illegible] நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கைவிடப்பட்ட கிணற்றில் சிப்பாயின் சடலம் மீட்பு!

## சங்கானையில் சம்பவம்

சங்கானை இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள கைவிடப்பட்ட கிணறு ஒன்றிலிருந்து இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

சங்கானை இராணுவ முகாமில் பணியாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் கடந்த சனியன்று காணாமல் போனார். இவரைத் தேடிச் சென்ற படையினரே இராணுவ முகாமுக்கு அருகிலிருந்த - கைவி[illegible]டப்பட்ட கிணறு ஒன்றில் சிப்பாயி[illegible] சடலத்தை கண்டு பிடித்ததாகவும் தெரியவருகிறது.

இதையடுத்து சிப்பாயின் ச[illegible]லம் மேலதிக மருத்துவப் ப[illegible] சோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பு உபகுழு

பாவனையாளர்கள். தேவையான போது ஆயுதங்களைப் பாவித்துவிட்டு வைத்துவிடுவோம்.

ஆகவே, இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது, இது சொல்லப்பட்டது. ஆயுதப்பிரச்சினையை எடுக்கவேண்டாம். அதைப்பற்றிப் பேச்சுக்கே இடமில்லை என்று.

எமது மக்களின் சுதந்திரம், மக்களின் கௌரவம் நிலை நாட்டப்பட்ட ஒரு தீர்வு வந்து, அதற்குப் பிறகும் எமது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஆயுதங்கள் தேவை.

இன்றைய பேச்சுக்களின் போது- முதல் தடவையாக அரசாங்கம் ஒப்புக்கொண்ட விடயம் யாதெனில், உயர்பாதுகாப்பு வலயத்துக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் இராணுவத்தை விலக்கி, அங்குள்ள வீடுகளைப் பொதுமக்களிடம் ஒப்படைத்து - சொத்துக்களைப் பொதுமக்களிடம் ஒப்படைத்து, அதை முதற்கட்டமாகச் செய்வோம் என இணங்கியுள்ளனர்.

இரண்டாவது கட்டமாக, உயர் பாதுகாப்பு வலயத்தில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரை எவ்வாறு தளர்த்துவது? எப்படி இடம்பெயர்வது என்பது குறித்து சில உலக இராணுவ நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்கள் என்றும், அவர்களின் ஆலோசனையைப் பெற்று உயர்பாதுகாப்பு வலயத்தில் எமது பொதுமக்களை மீண்டும் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதி மொழி தந்துள்ளனர். நாம் இதை மிகவும் விரைவாகச் செய்யுமாறு கேட்டுள்ளோம்.

இது 50 ஆண்டுகளாக இழுபட்டு வரும் மிகவும் சிக்கலான இனப்பிரச்சினை. இது குறிப்பிட்ட கால எல்லைக்குள் தீர்க்கப்பட முடியாத விடயம்.

ஆனால், தொடர்ந்து நாம் இதைப்பற்றிப் பேசி, இந்தப்பிரச்சினைக்கு ஒரு முடிவுகட்டுவதும் காலவரம்பு இடப்பட முடியாத ஒரு பிரச்சினை.

இந்த அரசாங்கம் இராணுவத்தின் மீது எந்த அதிகாரத்தையும் பிரயோகிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறது.

ஆகவே, உயர்பாதுகாப்பு வலயங்களைத் தளர்த்தி அதில், எமது மக்களைக் குடியேற்றும் திட்டத்தை கொண்டு வந்தபோதும் அதைச் சந்திரிகா எதிர்த்ததால், இராணுவத் தளபதிகள் எதிர்த்ததால் அதை நடைமுறைப்படுத்த முடியாமல்போனது ஒரு யதார்த்தமான உண்மை.

ஆனால், அதை எப்படிச்செய்யப் போகிறார்கள் என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

பாதுகாப்பு உபகுழு இப்பொழுது செயலற்றுப்போய்விட்டது. இந்த உபகுழுவை நாங்கள் இனி மீண்டும் செயற்படுத்தப் போவதில்லை என முடிவுசெய்து விட்டோம்.

புனர்வாழ்வு, புனர்நிர்மாண குழு என ஒரு உபகுழு இருக்கிறது. இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் பொறுப்புக்களை இந்த முதற்குழுவிடம் ஒப்படைக்க நாம் முடிவு செய்திருக்கிறோம்.

இதன்படி- தமிழ்ச்செல்வன் தலைமையிலான புனர்வாழ்வு புனரமைப்புக் குழுவின் கீழ் உள்ள கட்டமைப்பின், நிர்வாகத்தின் கீழ் இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்யும் வேலை மேற்கொள்ளப்படும். அதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

மீள்குடியேற்றம் என்ற மனிதாபிமானப் பிரச்சினைதான், உண்மையான பிரச்சினை. இராணுவம், அதற்கு ஒரு இராணுவ ரீதியான தீர்வை வைத்தது.

அதாவது- புலிகள் ஆயுதங்களை கையளிக்கவேண்டும் என்று நிபந்தனை விதித்தது. இதை நாங்கள் ஏற்கமாட்டோம் என மறுத்து, இப்படியான தீர்வு வைத்தால் இந்தப் பேச்சுவார்த்தை பாதிக்கப்படும் என அரசாங்கத்துக்கு எச்சரித்து, நாம் அழுத்தம் செய்ததால் அரசாங்கம் இப்போது இறங்கி வந்து, புலிகளின் ஆயுதங்களைக் களைவது என்ற பிரச்சினையைக் கைவிட்டது.

உயர்பாதுகாப்பு வலயத்தைத் தளர்த்துவது குறித்தும், இராணுவத்தினரை மீள இடம்மாற்றுவது குறித்தும் யோசிக்கும் அளவுக்கு வந்துள்ளது. இது எம்மைப் பொறுத்தவரையில் - புலிகளுக்கு பேச்சுவார்தையில் கிடைத்த ஒரு வெற்றி.

இன்று(நேற்று) தனிமனித உரிமை மீறல் குறித்து பேசவில்லை. குறிப்பாக சமூகத்துக்கு - ஒரு இனத்தின் ஒட்டுமொத்தமான மனித உரிமை மீறல் குறித்தே பேசினோம்.

இப்படிப் பேசும்போது, சுயநிர்ணய உரிமை குறித்து ஆழமாகப் பேசியுள்ளோம். அதாவது- தமிழீழ மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு. அவர்கள் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில்- அவர்களுக்கு என ஒரு மொழி, கலாச்சாரம், வரலாறு, பாரம்பரிய நிலம், இப்படியான அம்சங்கள் இருப்பதால் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை வலியுறுத்தினோம்.

இந்த சுயநிர்ணய உரிமை ஒரு மனிதஉரிமை. இந்த உரிமை மதிக்கப்படல் வேண்டும். இந்த உரிமையின் அடிப்படையில்தான் நாம் எமது தமிழர் தாயகத்தில் ஒரு சுயாட்சி, அதாவது, தமிழ் மக்கள் தம்மை ஆளக்கூடிய சுயாட்சியை கேட்கிறார்கள்.

ஆகவே, இதை அரசாங்கம் அங்கீகரிக்கவேண்டும். சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அதில் தமிழ் மக்களுக்கு இந்த உரிமை உண்டு என்பது பற்றியும் வலியுறுத்திக் கதைத்தோம என்றும் பாலசிங்கம் கூறினார்.

## புங்குடுதீவில்...

அரசியற்துறைச் செயலகத்தின் பெயர்ப்பலகையை, யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து திறப்பு விழாவையொட்டி விடுதலைப் புலிகளின் போராளிகளும், பிரமுகர்களும் உரையாற்றினர்.

## மன்னிப்பு...

பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளனர்.

அதேவேளை- ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சிறுவர் உரிமைகளுக்கான விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணுவையும் அரசு மற்றும் புலிகளின் பிரதிநிதிகள் இணைந்து சந்திக்கவுள்ளதாகவும் கூறப்பட்டது.

## உயர் பாதுகாப்பு...

யங்களின் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக மூன்றாவது நாடொன்றின் இராணுவ நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவதற்கும் பேச்சுக்களில தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி அரசாங்கம் இந்திய முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சதீஸ் நம்பியாரின் ஆலோசனைகளைப் பெறவுள்ளது.

இவ்வாறு மீளக்குடியமர்த்துவதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும்- மீளக்குடியமரும் பிரதேசங்களில் கண்ணிவெடிகளை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான இறுதி முடிவுகள் நான்காம் கட்ட பேச்சுவார்த்தைகள் நிறைவு பெறுவதற்கு முன்னர் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்[illegible] வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகி[illegible] விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.47 | 96.90 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.56 | 155.93 |
| 1 யூரோ | 100.34 | 101.53 |
| 1 சுவிஸ் பிராங் | 68.73 | 69.79 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 55.07 | 56.05 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.79 | 25.79 |

ராம்கோ சீமேந்து

இலங்கையில் மட்டுமா இல்லை.

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

இந்தியாவில் மட்டுமா இல்லவே இல்லை.

ஆசியாவின் முதலாம்தர (நம்பர் 1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்படும் RAMCO சீமேந்து (கோபுர மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு:- யாழ். அரசாங்க அதிபர் திரு.செ.பத்மநாதன் அவர்களின் ஒத்துழைப்பினால் சீமேந்தின் விலையை பருத்தித்துறை துறைமுகத்தில் 400/- வுக்கு பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

யாழ்.குடாநாட்டில் 410/-க்கு விநியோகம் செய்யப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம். கூட்டுறவுச்சங்க லொறிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் பருத்தித்துறை இறங்குதுறையில் சீமேந்து வழங்கப்படும். வர்த்தகர்கள் தமது லொறிகள் மூலமாக ஏற்ற விரும்பின் தமது லொறிகளை எமது நிறுவனத்தில் பதிவு செய்து சீமேந்தை ஏற்றலாம்.

ராம்கோ சீமேந்து ஏக இறக்குமதியாளர்
ஈஸ்வரபகவான் & கம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P: 021-2222350
(சி-453)

யாழ்.குடாநாட்டு
லொறி உரிமையாளர்களுக்கான
அறிவித்தல்

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து சீமேந்து இறங்கிக் கொண்டிருக்கின்றது. உங்கள் லொறிகளுக்கு யாழ். குடாநாட்டுக்குள் விநியோகம் செய்வதற்கு பக்கற் ஒன்றுக்கு 10/- படி போக்குவரத்து கூலியாக வழங்கப்படும். ஏற்ற விரும்புபவர்கள் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ஈஸ்வரபகவான் & கம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021-2222350
(சி-452)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.01 .2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.